# விருதுநகர் வடக்கு மாவட்டக் கழகக் கூட்டம்!


## அமைச்சர் – மாவட்டச் செயலாளர் தங்கம் தென்னரசு அறிவிப்பு!

*விருதுநகர், மார்ச் 19-*

*விருதுநகர் வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தங்கம் தென்னரசு விடுத்துள்ள அறிக்கையில்,*

*விருதுநகர் வடக்கு மாவட்டக் கழக கூட்டம் இன்று (19.3.2026 - வியாழக்கிழமை) மாலை 5.00 மணியளவில், மல்லாங்கிணர், இராஜாமணி திருமண மண்டபத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர் வி.தங்கராஜ் தலைமையில் நடைபெற உள்ளது.*

*இக்கூட்டத்தில் மாநிலக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், பகுதி மற்றும் வட்டக் கழகச் செயலாளர்கள்/நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.*



*இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தங்கம் தென்னரசு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

---

## தமிழ்நாட்டில் உணவகங்கள் மூடப்படும் அபாயம்!

# எரிவாயு சிலிண்டர்கள் தடையின்றி வழங்குவதை உறுதி செய்க!

## மக்களவையில் – டி.எம்.கதிர் ஆனந்த் வலியுறுத்தல்!

புதுடெல்லி, மார்ச் 19–

தமிழகத்தில் உள்ள உணவகங்கள் மற்றும் ஹோட்டல்கள் மற்றும் வீடுகளுக்கு வணிக/வீட்டு சமையல் எரிவாயு (எல்பிஜி) சிலிண்டர்கள் தடையின்றி வழங்கப்படுவதை உறுதி செய்ய ஒன்றிய அரசு போர்க்கால நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று மக்களவையில் விதி எண். 377ன் கீழ் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் D.M.கதிர் ஆனந்த் வலியுறுத்தினார்.

மத்திய கிழக்கு நாடுகளில் நிகழும் ஈரான் இஸ்ரேல் சண்டை மோதல் காரணமாக நுகர்வு விநியோகச் சங்கிலி சீர்குலைந்து தமிழ்நாட்டில் கடுமையான வணிக ரீதியான LPG பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது தமிழ்நாட்டில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான உணவகங்கள் மூடப்படும் என்ற அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

சென்னை, வேலூர் போன்ற மாவட்டங்களில், சுற்றுலா சார்ந்த உணவகங்கள் மற்றும் ஓட்டல்கள் ஏற்கனவே மூடத் தொடங்கியுள்ளன.

வீட்டு விநியோக சமையல் எரிவாயு சிலிண்டர் முன்னுரிமை அளிக்கப்பட்டாலும், வணிகப் பயனர்கள் ஏற்கனவே கடுமையான பற்றாக்குறையை எதிர்கொள்கின்றனர், இதனால் உணவகங்கள் மூடப்படுதல், மெனு கட்டுப்பாடுகள், பண்டங்கள் அதிக விலை, மின்சாரம் அல்லது விறகு மாற்று எரிபொருளை நம்பியிருப்பது போன்றவற்றுக்கு வழிவகுக்கிறது.

விநியோக இடையூறு வளைகுடாவில் பதட்டங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது, இறக்குமதியை வெகுவாக பாதிக்கிறது.

வணிக ரீதியிலான LPG (19 கிலோ சிலிண்டர்கள்) விநியோகம் அதிக அளவில் தடைசெய்யப்பட்டுள்ளது, விநியோகஸ்தர்கள் விநியோகத்தை நிறுத்தத் தொடங்கினர். அதே சமயம் வீட்டு உபயோக சிலிண்டர் (14.2கிலோ)விநியோகங்களும் தடைகளை எதிர்கொண்டுள்ளன.

ஹோட்டல்கள், கேட்டரிங் சேவைகள் இதற்கிடையில், ஒரு



வேதனையான இக்கட்டான சூழ்நிலையை எதிர்கொள்கிறது, திருமணங்கள் மற்றும் பிற நிகழ்வுகளுக்கான முன்பதிவுகளுடன் உறுதிப்படுத்தப்பட்ட விருந்து கொடுக்கும் வாடிக்கையாளர்களுக்கு இப்படிப்பட்ட செய்திகளை வழங்கு வது எப்படி?

வீட்டு எல்பிஜி சிலிண்டரைப் பெறுவதற்கான காத்திருப்பு காலம் அதிகரித்து வருகிறது, முன்பதிவு செய்த பிறகு வீட்டு எரிவாயு சிலிண்டரைப் பெற மக்கள் 3040 நாட்கள் காத்திருக்க வேண்டியுள்ளது.

இந்த நெருக்கடியில் மத்திய அரசு உடனடியாக தலையிட்டு தீர்வு காண வேண்டும் என்று தமிழக முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

சுமார் 50 லட்சம் தொழிலாளர்கள் நேரடியாக உணவகங்களை நம்பியிருக்கிறார்கள், மேலும் 50 லட்சம் பேர் மறைமுகமாக இந்தத் துறையை நம்பியுள்ளனர். எரிவாயு விநியோகத்தை உடனடியாக மீண்டும் தொடங்காவிட்டால், ஒட்டுமொத்தத் தொழிலும் முடங்கிப் பெரும் நெருக்கடி நிலைக்கு தள்ளப்படும்.

எனவே, தமிழகத்தில் உள்ள உணவகங்கள் மற்றும் ஹோட்டல்கள் மற்றும் வீடுகளுக்கு வணிக/வீட்டு எல்பிஜி சிலிண்டர்கள் தடையின்றி வழங்கப்படுவதை உறுதி செய்ய அவசர போர்க்கால நடவடிக்கைகளை எடுக்குமாறு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு வேலூர் எம்.பி. டி.எம்.கதிர் ஆனந்த் நாடாளுமன்ற மக்களவையில் விதி எண் 377 கீழ் வலியுறுத்தினார்.

---

## கலைஞர் நகர் தெற்குப் பகுதி –

# 137 ‘ஆ’ வட்டக் கழக பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## வட்டச் செயலாளர் அ.கதிரேசன் அறிவிப்பு!

*சென்னை, மார்ச். 19-*

*சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் - மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி கலைஞர் நகர் தெற்கு பகுதி 137 ஆ வட்டக் கழக பாக முகவர்கள் கூட்டம் எண்.30/73, அண்ணா நெடுஞ்சாலை, எம்.ஜி.ஆர். நகர் அலுவலகத்தில் வட்ட கழக அவைத்தலைவர் என்.சக்கரவர்த்தி தலைமையில் இன்று (19.03.2026) மாலை 06:30 மணி அளவில் நடைபெறுகின்றது.*

*இக்கூட்டத்தில் வட்ட கழக பாக முகவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு 137 ‘ஆ’ வட்டச் செயலாளர் அ.கதிரேசன் தெரிவித்துள்ளார்.*

---

## அமைச்சர் கோவி.செழியன் - சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினர்!

# தமிழ்நாட்டில் மீண்டும் திராவிட மாடல் அரசு 2.0 அமைய அயராது பாடுபடுவோம்!

## தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டத்தில் தீர்மானம்!

தஞ்சாவூர், மார்ச் 19 –

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க செயற் குழு கூட்டம், 17.03.2026 செவ்வாய் அன்று கும்பகோணம் மாவட்டக் கழக அலுவலகம், அண்ணா பணிமனையில் மாவட்ட அவைத்தலைவர் க.நசீர்முகமது தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் எஸ்.துரைமுருகன், ஜெயலெட்சுமி நடராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்டக் கழக பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்து விளக்கவுரையாற்றினார்.

அதனை தொடர்ந்து உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் சிறப்புரையாற்றினார்.

இதில் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, திருவிடை மருதூர் தொகுதி மேற்பார்வையாளர் முனைவர் குறிஞ்சி வாணன், உள்ளிட்ட ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் சிறப்பு அழைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பின்வரும் தீர்மானங்களை மாவட்ட துணைச் செயலாளர் கோவிஅய்யாராசு வாசித்தார். கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 16.03.2026 திங்கள் அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டதில் சட்டமன்ற பொதுத்தேர்தலில் கழக வேட்பாளர்கள் மற்றும் மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வேட்பாளர்கள் அனைவரையும் அதிகபடியான வாக்குகள் வித்யாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும் என்ற அன்பு கட்டளையிட்டுள்ளார். கழகத் தலைவரின் கட்டளைஏற்று கழகம் அறிவிக்கும் வேட்பாளர்களை மகத்தான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற வைத்து மீண்டும் திராவிடமாடல் அரசு அமைக்கவும், மீண்டும் கழகத் தலைவர் தளபதி அவர்களை முதல்வர் அரியணை ஏற்றவும் தஞ்சை வடக்கு மாவட்டக் கழகம் முழுமையாக உழைக்கும் என இக்கூட்டத்தின்வாயிலாக தெரிவித்து கொள்கிறோம்.

பாகமுகவர் குறிப்பேடு தங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு உள்ளது. அதனை 21.03.2026 அன்று தலைமைக் கழகத்தில் ஒப்படைக்க வேண்டும் அதனால் வருகின்ற வெள்ளிக் கிழமைக்குள் பாகமுகவர் குறிப்பேட்டை மாவட்டக் கழகத்திடம் ஒப்படைக்க மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்களை இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்கிறோம்.

புதிய வாக்காளர்கள், சேர்க்க வருகின்ற 26.03.2026 அன்றுவரை விண்ணப்பிக்கும் வாக்காளர்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் சேர்க்குப்படும். எனவே தங்கள் பகுதிகளில் 18 வயது பூர்த்தியான இளம் வாக்காளர்கள் இருந்தால் உடனடியாக அவர்களை விண்ணப் பிக்க செய்து வாக்காளர் பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுக்கவும், மேலும் எஸ்.ஐ.ஆர் திருத்தத்தின் போது யாருடைய பெயராவது விடுப்பட்டிருந்தாலும் அவர்களையும் கண்டறிந்து வாக்காளர் பட்டியலில் இணைக்க பி.எல்.ஏ2க்களை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

**மாவட்ட கழகத்தினருக்கு பாராட்டு!**

தீரர்கள் கோட்டமாம் திருச்சியில் நடைபெற்ற இந்திய அரசியல் வரலாற்றின் முக்கிய கூட்டமாக கருதப்பட்ட கழக மாநில மாநாட்டில் நமது தஞ்சை வடக்கு மாவட்டத்திலிருந்து பெருந்திரளாக கலந்துகொண்டு மாநாட்டை வெற்றியடையச் செய்த அனைத்து கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் அனைவருக்கும் இக்கூட்டத்தின் வாயிலாக நன்றியையும், பாராட்டையும் தெரிவித்து கொள்கிறோம்

நடைபெற உள்ள 2026 சட்டமன்ற பொதுத்தேர்தலுக்கு சுவர் விளம்பரம் செய்ய வேண்டிய இடங்களை உடனடியாக தேர்வு செய்து, விளம்பரம் செய்ய உள்ள இடத்தின் உரிமையாளரை அனுகி உரிய அனுமதி பெற்று அனுமதிக்கான விண்ணப்பத்தை தேர்தல் ஆணைய வலைதளத்தில் பதிவிறக்கம் செய்து அதில் கையொப்பம் பெற்று இணையதளம் வாயிலாக தேர்தல் ஆணையத்தில் ஒப்படைக்க இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தஞ்சை வடக்கு மாவட்ட திமுக சார்பில் முன்னாள் மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான சு.கல்யாணசுந்தரம் முயற்சியில் கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு கும்பகோணம் ரயில்வே சாலையில் கட்டப்பட்ட கலைஞர் அறிவாலயம் கட்டிடத்தின் வளாகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலை அமைப்பதற்கு கடும் சிரமம் மேற்கொண்டு அரசு அனுமதி பெற்று தந்த கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களுக்கும், கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்களுக்கும், மாவட்ட கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ அவர்களுக்கும் இக்கூட்டம் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்து கொள்கிறது.

**முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!**

தமிழர்களின் வளர்ச்சிக்கு தொடர்ந்து முட்டுக்கட்டை போட்டு தடுத்து வந்த ஒன்றிய அரசு, தமிழ் நாகரிகத்தின் தொன்மையை அழிக்கும் விதத்தில் தமிழ் நாட்டில் நடைப்பெற்று வந்த அகழ்வாராய்ச்சி பணிகளை ஒன்றிய அரசு தடுத்து நிறுத்தியது. தமிழ் நாகரிகம் என்பது இந்தியாவின் நாகரீகப் பண்பாட்டுக்கு பெருமை சேர்ப்பது. எனவே, அகழ்வாராய்ச்சிக்கு ஒன்றிய அரசு உடனே ஒப்புதல் வழங்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்கள் வலியுறுத்தியிருந்தார். தற்போது ஒன்றிய அரசு தமிழ்நாடு முதல்வரின் வலியுறுத்தலை ஏற்று தொல்லியல் துறை சார்பில் 5 இடங்களில் அகழ்வாராய்ச்சி நடைபெற்று வரும் சூழலில், தற்போதைய 8 இடங்களையும் சேர்த்து 13 இடங்களில் அகழ்வாராய்ச்சி செய்ய அனுமதி வழங்கியுள்ளது. தமிழர்களின் தொன்மையை உலகறிய செய்ய அகழ்வாராய்ச்சி பணிக்கு ஒன்றிய அரசை வலியுறுத்தி அனுமதி பெற்றுத் தந்த கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

## நொளம்பூர் வே.ராஜன் பங்கேற்பு !

# 146 வது வட்ட நிர்வாகிகள் பாக முகவர்கள் ( BLA 2) கூட்டம்!

## வட்டச் செயலாளர் மதுரவாயல் எம்.ரூபன் அறிக்கை!

*சென்னை மார்ச்: 19*

*சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்கு பகுதி, 146 வது வட்டத்தில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்கவும், சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர மா. சுப்பிரமணியன் அவர்களின் வழிகாட்டுதலின்படி இன்று (19.3.2026) மாலை 6 மணி அளவில் வட்டக் கழக செயலாளர் அலுவலகத்தில் வட்டக் கழக அவைத் தலைவர் டி எஸ். மகாதேவன் தலைமையில் வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்கள் கூட்டம் நடைபெற உள்ளது.*

*இக் கூட்டத்தில் மதுரவாயல் வடக்கு பகுதி கழக செயலாளர், 11 வது மண்டல குழு தலைவர் நொளம்பூர் வே. ராஜன் அவர்கள் கலந்து கொண்டு ஆலோசனை வழங்க உள்ளார்கள்.*

*மேலும் இக்கூட்டத்தில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல் குறித்து ஆலோசிக்க உள்ளதால் நம்முடைய 146 வது வட்டக் கழகத்திற்கு உட்பட்ட பகுதி கழக நிர்வாகிகள் மாவட்ட பிரதிநிதிகள் மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்,பாக முகவர்கள்( BLA 2)அனைவரும் தவறாமல் பங்கேற்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.*

*இவ்வாறு 146 வது வட்ட கழக செயலாளர் மதுரவாயல் எம். ரூபன் தெரிவித்துள்ளார்.*

---

# அ.தி.மு.க.வின் அர்த்தமற்ற, அற்ப அரசியல்!

என்.டி.ஏ. கூட்டணியை ஒரே மேடையில் ஏற்றி ஒற்றுமையை மக்களுக்கு காட்ட வேண்டும் என்பதற்காக அவர்கள் தேர்ந்தெடுத்த போராட்டம் தான் சட்டம் ஒழுங்கு பிரச்சினைக்கான ஆர்ப்பாட்டம்!

ஆனால் இந்தப் போராட்டம் கூட்டணியின் ஒற்றுமைக்கு வேட்டு வைத்து விட்டது.

தி.மு.க. எதிர்ப்பு இப்போது அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் மற்றும் திண்டுக்கல் சீனிவாசன் எதிர்ப்பாக உருமாறி விட்டது. கூட்டணி கட்சியான பா.ஜ.க.வினரே அ.தி.மு.க. சண்முகத்தை வன்மையாக கண்டிக்கிறார்கள். சொந்தக்காசில் சூனியம் வைத்த கதை தான்.

அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தை விட தி.மு.க. ஆட்சிக் காலத்தில் குற்றங்கள் குறைவு என்று புள்ளி விவரங்களுடன் உள்துறை செயலாளர் அறிக்கை விடுத்திருக்கிறார் .

நடப்பது எந்த ஆட்சியாக இருந்தாலும் நாட்டில் நடக்கும் கொலை, கொள்ளை, வன்முறை, பாலுறவு வன்கொடுமை குற்றங்களுக்கு ஆட்சியை குற்றம் சாட்டுவது நியாயமும் இல்லை. அர்த்தமும் இல்லை என்பதே நமது உறுதியான கருத்து. இவை அனைத்தும் சமூகம் சார்ந்த குற்றங்கள். வன்முறைகள் நடக்கப் போவதை முன்கூட்டியே அறிந்து தடுக்கக்கூடிய “மந்திரக் கோல்” எந்த அரசிடமும் இல்லை; இருக்கவும் முடியாது. குற்றம் நடந்த பிறகு நடவடிக்கை எடுக்காமல் இருந்தால் தான் தவறு. அப்படி எந்தக் குற்றச்சாட்டையும் இந்த ஆட்சியின் மீது கூறி விட முடியாது.

அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் பாலுறவு வன்மையில் ஈடுபட்ட குற்றவாளியை தி.மு.க.வுடன் இணைத்து பேசினார்கள். ஆனால் குறுகிய காலத்தில் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு ஆயுள் தண்டனையை நீதிமன்றம் வழியாக மிகக் குறுகிய காலத்தில் பெற்றுத் தந்திருக்கிறது தமிழ்நாடு அரசு. ஆனால் பொள்ளாச்சி கூட்டுப் பாலுறவு வன்முறை வழக்கில் சொந்தக் கட்சிக்காரரை காப்பாற்றுவதற்கு எடப்பாடி ஆட்சி முயன்றதையும் குற்றச்சாட்டு பதிவில்லாமல் காலம் கடத்தியதையும் நாடு பார்த்தது.

நாட்டின் வளர்ச்சிக்கான மக்களின் எதிர்கால கனவுகளை ஒரு மக்கள் தலைவராக அறிய விரும்பினார் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின்.

ஆனால் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகத்துக்கு அது படுக்கை அறை கனவாகவே தெரிந்தது. இது அவருடைய வக்கிர புத்தி; இதே போன்ற வக்கிர மனநிலையாளர்களால்தான் சமூகத்தில் பாலுறவு வன்முறைகளும் குழந்தைகள் மீதான வன்முறைகளும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்தக் குற்றங்களுக்கும் ஆட்சிக்கும் நேரடி தொடர்பு இல்லை என்பதற்கு சண்முகமே பதிலாகவும் சாட்சியாகவும் நிற்கிறார்.

தி.மு.க.வினரே மக்களிடம் போய் நீங்கள் குற்றச்செயலில் இறங்குங்கள் நாங்கள் காப்பாற்றுகிறோம் என்று கூறுவதைப் போல இருக்கிறது. இவர்களின் குற்றச்சாட்டு.

நாட்டில் நடக்கும் குற்றங்கள் சமூக ஒழுங்கு மீறல்களே. இந்த சமூக ஒழுங்கு மீறல்கள் வழியாக மக்களே சட்டம் ஒழுங்குகளை சீர்குலைக்கிறார்கள்.

ஆட்சி சீர்குலைக்கவில்லை.

மற்றொன்றையும் குறிப்பிட வேண்டும்

சட்டம் ஒழுங்கு சீர்கேடு என்பது வேறு ;

பொது ஒழுங்கு சீர்கேடு என்பது வேறு;

மணிப்பூரில் நடப்பது பொது ஒழுங்கு சீர்கேடு ;ஆட்சி நிர்வாகமே முடங்கிக் கிடக்கிறது.இந்த ஆட்சியை கலைப்பதற்கு சட்டத்தில் இடம் இருக்கிறது. ஆனால் அனைத்து மாநிலங்களிலும் அன்றாடம் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற சமூக குற்றங்களை அரசின்மீது ஏற்றி ஆட்சியாளர்களை குற்றவாளிக்கூண்டில் ஏற்ற துடிப்பது அற்ப அரசியல் ; அர்த்தமற்ற அரசியல்.

திராவிட மாடல் ஆட்சியை கண்டிப்பதற்கு இவர்களுக்கு இதை விட்டால் வேறு பிரச்சினையே இல்லை. சரி; என்.டி.ஏ.அணியோ, த.வெ.க.வோ அதிகாரத்துக்கு வந்தால் கொலையோ, கொள்ளையோ, பாலுறவு வன்முறையோ நடக்கவே நடக்காது என்று இவர்களால் அறிவிக்க முடியுமா? தேர்தல் அறிக்கையில் அறிவிப்பார்களா?

“இந்தக் கூட்டத்தில் எவராவது ஒழுக்க சீலர் இருந்தால் இந்த பெண்ணின் மீது கல்லை எறியலாம் “என்று இயேசுநாதர் சொன்னதாகக் கூறப்படும் கதைதான் நினைவுக்கு வருகிறது.

**விடுதலை இராஜேந்திரன்**
பொதுச் செயலாளர்
திராவிடர் விடுதலைக் கழகம்



---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# மிசா இரா.துரைமாணிக்கம்

### மார்ச் 19 (2025)



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

ஒருங்கிணைந்த புதுக்கோட்டை மாவட்ட அவைத்தலைவர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்பு வகித்தவர்.

ஆவுடையார்கோவில் ஒன்றிய பெருந்தலைவராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, நெருக்கடி கால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# கே.என்.செல்வராஜ்

### மார்ச் 19 (2021)



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

கும்பகோணம் நகரத்தில் கொட்டையூர் பகுதியில் இருபது ஆண்டுகள் செயலாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

மூன்று முறை நகர்மன்ற உறுப்பினராக பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

குடந்தை வாணி விலாச சபா செயலாளராகவும், பொருளாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**